REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் அறிஞர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 12உ புதன் (26—12—56) ★ ☆ வெளியூர்: மார்கழி 13உ வியாழன் (27—12—56) [இதழ் 171

113 டன் பால்தந்த பசு!

★

பிரான்ட்போர்டு ஒண்டாரியோ) டிச. 25—15 வயதான கனடா பசு ஒன்று, இதுவரை 113 டன் பால்தந்து, உலக 'ரிகார்டு' ஒன்றை நிறுவியுள்ளதாம்!

மேலும் அந்தப் பசு 10 முறைகளில் வழங்கிய பால் மூலம் 9,861 பவுண்டு வெண்ணெய் கிடைத்ததாம்!

முத்தும் பவழமும் ஏற்றுமதி செய்த நமது மூதாதையர் எங்கே? கூலிகளை ஏற்றுமதி செய்யும் நாம் எங்கே?

மலை ஊற்று போன்ற உற்பத்தித் தொழில் வடநாட்டில்! குடத்து நீர் போன்ற சிறு வியாபாரம் தமிழ்நாட்டில்!

இந்த நிலைக்கும் வெள்ளையர்கால கொள்கைக்கும் வேறுபாடு உண்டா?

வர்த்தகக் கோட்டத்தில் அண்ணா முழக்கம்

"தமிழ் நாட்டில் உள்ள வியாபாரிகள், யாரோ தயாரிக்கிற சரக்குகளை வாங்கி; அதன்மீது கொஞ்சம் இலாபம் வைத்து இங்கு விற்பனை செய்பவர்களாக இருக்கிறார்கள்.

"நாம், இங்குள்ள வியாபாரிகளை எண்ணிப் பார்க்க வேண்டுமெல்லாம், அவர்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கவில்லை என்ற உண்மையைத்தான்.

"இங்குள்ள வியாபாரிகள், நாட்டில் நிலவுகிற ஆட்சியினரின் சட்டதிட்டங்களிலே உள்ள குறைகளால் அனுபவிக்கிற தொல்லைகளைக் குறித்து எனக்கு முன் பேசியவர்கள் எடுத்துரைத்தார்கள். வியாபாரிகளின் சார்பில், அவர்களது சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் குறைகள் பற்றி நாடெங்கும் எடுத்துச் சொல்லி, அவைகளையப்பட வேண்டும் என்பதற்காகப் போராடி வருகிறார்கள். நாம் இங்கே அவர்களுக்கு எடுத்துரைக்க விரும்புவதெல்லாம்—அந்தக் குறைகளைப் பற்றி மட்டும் இந்த நாட்டு வியாபாரிகள் எண்ணிப் பார்த்தால் போதாது; அவர்கள், வடநாட்டில் யாரோ உற்பத்தி செய்கிற பொருளை வாங்கி, சிறு இலாபத்திற்காக விற்றுக்கொண்டிருக்கிறார்களே தவிர, இவர்களோ, அல்லது இந்த நாட்டைச் சேர்ந்த வேறெவரோ அந்த உற்பத்தியில் ஈடுபட்டில்லை என்பதையும் எண்ணிப் பார்த்தாகவேண்டும் என்பதைத்தான்!

"வடநாட்டவர், இங்குள்ள கிராமவாசிகளிடம் மூலப் பொருள்களை வாங்கி வடநாட்டிற்கு எடுத்துச் சென்று, அவற்றை பல உபயோகப் பொருள்களாகத் தயாரித்து இங்கே அனுப்புகிறார்கள். அந்த உபயோகப் பொருள்களைத்தான் நமது நாட்டு வியாபாரிகள் விற்பனை செய்து, சிறிது இலாபம் பெற முயற்சிக்கிறார்கள்.

"தென்ஆற்காடு மாவட்டத்தில் வேர்க்கடலை அதிகமாக விளைகிறது; அந்த மாவட்ட மக்களில் மிகப் பெரும்பாலானவர்களுக்கு வேர்க்கடலைதான் பெரிய செலவம்!

"இந்த வேர்க்கடலை, பயிரிடப்பட்ட உடனேயே வடநாட்டவர், இங்குள்ள விவசாயிகளை ஏஜெண்டுகள்மூலம் அணுகிப் பேரம் பேசுகிறார்கள்; ஆறு மாதத்திற்குப் பிறகு கிடைக்கப்போகும் வேர்க்கடலைக்கு அப்போதே முன்பணம் தருகிறார்கள். ஒரு விவசாயிக்கு 10 ஏக்கர் நிலமிருந்து அவர் அதில் வேர்க்கடலை பயிரிட்டிருந்தால், அந்தப் பயிர்மீது வடநாட்டவர் முன்பணம் தருகிறார்கள். ஆறு மாதத்திற்குப் பிறகு வேர்க்கடலை விலை ஏறவும் செய்யலாம்—இறங்கவும்கூடும் என்பதை எல்லாம் கவனியாது, முன்பணம் தரும் நேரத்தில் நிலவும் மார்க்கெட் நிலவரப்படி விலை நிர்ணயம் செய்து கையெழுத்து வாங்கிக்கொண்டு வடநாட்டவர் கடன் தருகிறார்கள். நமது விவசாயிகளும், அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தினால்—நெருக்கடியினால் முன்பணத்திற்கு ஆசைப்பட்டு இதற்குச் சம்மதித்து விடுகிறார்கள்.

"இப்படி வாங்கிச் செல்கிற வேர்க்கடலையைக்கொண்டு வடநாட்டு முதலாளிகள், தங்கள் தொழிற்சாலைகளில் எண்ணெய், நெய், டால்டா, வனஸ்பதி, சோப்பு முதலிய பல பொருள்களை உற்பத்தி செய்து, மீண்டும் இங்கே அனுப்பிவைக்கிறார்கள். அதனை வாங்கி நமது வியாபாரிகள், வேர்க்கடலையை எந்த விவசாயி விற்றாரோ அவனிடத்திலேயே விற்கிறார்கள்

"இந்த நிலையினால், இந்த நாட்டவருக்கு இருவகையான நஷ்டம் ஏற்படுகிறது என்பதை வியாபாரப் பெருமக்கள் உட்பட பலரும் உணரவேண்டாமா?

"இப்படிப் பல உற்பத்தித் தொழில்களும் வடநாட்டவரிடம்தான் இருக்கின்றன.

"ஓயாது நீர்வந்துகொண்டிருக்கும் மலை ஊற்றுப்போன்றது உற்பத்தித் தொழில்! ஆனால், அப்படி வரும் நீரை குடத்தில் பிடித்துவைத்துக் கொள்வது போன்றது நமது வியாபாரிகளின் வர்த்தகத் தொழில்! குடத்து நீர் காலியானதும் மீண்டும் ஆற்றுக்கு ஓடவேண்டும்—நீர் கொண்டுவர! ஆனால், மலை ஊற்று அப்படிப்பட்டதல்லவே!

"வியாபாரத்திலேகூட நம் நாட்டவரிடம் இருப்பதெல்லாம்என்ன? கருவாடு எற்றுமதிதானே! அதுவும் விளையாமல் புழுத்துப் போனால், நாமே தின்று விடுகிறோம்!

"ஆனால், கருவாட்டினை ஏற்றுமதி செய்யத் தேவைப்படும் கப்பல் முதல், பாங்கிகள் போன்ற பல முக்கிய துறை வர்த்தகங்களிலும் வடநாட்டவர்தான் ஈடுபட்டிருக்கின்றனர்.

"உற்பத்தி செய்வதும் அதனைப் பெருமளவில் விற்பனை செய்வதும் அவர்கள்—வடநாட்டவர்; நாம், அந்த வடநாட்டவரிடமிருந்து சிற்சில பொருள்களை வாங்கிவந்து வியாபாரம் செய்பவர்களாகவே இருக்கிறோம்.

"வெள்ளைக்காரன், இங்கிருந்து பருத்தியை வாங்கிச் சென்று, அதனை லங்காஷயரிலும் மான்செஸ்டரிலும் துணியாக உற்பத்தி செய்து, மீண்டும் இங்கே கொண்டு வந்து விற்பனை செய்தான்.

"அந்த நிலைக்கும், இப்போது வடநாட்டவர் இங்கிருந்து மூலப் பொருள்களை வாங்கிச் சென்று உபயோகப் பொருள்களாகத் தயாரித்து நம்மிடமே கொண்டுவந்து விற்கும் நிலைக்கும் என்ன வேறுபாடும் நமக்குத் தெரியவில்லை. இதனை, இந்த நாட்டு வர்த்தகர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

"இன்றைய நம் நாட்டு நிலை இதுதான்.

"ஆனால்.....! நமது மூதாதையர் காலத்தில் நம் நாட்டவர், அலைகடலைத் தாண்டிச்சென்று கிரேக்கத்திலும் யவனத்திலும் வியாபாரம் நடத்தித் தமிழ் நாட்டிற்குத் தங்கத்தைக் கொண்டுவந்தனர் என்ற வரலாறு கூறும் இலக்கியங்கள் நம்மிடம் இருக்கின்றன.

"பவளத்தையும் முத்துக்களையும், அகிலையும் சந்தனத்தையும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, தாயகத்திற்குத் தங்கத்தைக் கொண்டுவந்த நமது மூதாதையர்கள் எங்கே?

"இன்று சோறுபோட முடியாததால், இங்குள்ள மக்களைக் கூலிகளாக வெளிநாடுகளுக்கு கப்பல்களில் 'ஏற்றுமதி' செய்யும் நாம் எங்கே?

"நமது மூதாதையர்கள் பெற்றிருந்த பெருமைக்குரிய வாழ்வு எங்கே? நாம் நடத்தும் அடிமை வாழ்வு எங்கே?

"நமது மூதாதையர்களை நினைத்துப் பெருமைப்படும் நாம், அவர்களைப்போல சுதந்திரத்தோடு, சுகத்தோடு வாழ வேண்டாமா? அவர்களைப் போல, பொன் குவிக்கும் வாணிபம் நடத்தவேண்டாமா?

"இதனால்தான், அடிமைகள் என்ற அவலம் நீங்கிய—பெருமைக்குரிய வாழ்வு பெறத்தான் திராவிடருக்கு-தமிழருக்கு, தங்களுக்கென ஓர் துரைத்தனம் வேண்டும் என்று கூறுகிறது, தி. மு. கழகம்."

என்று அண்ணா அவர்கள், கடந்த 23-12-56 அன்று சென்னை 28-வது வட்டம் பூர்ணா நகர் தி. மு. கழகக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்கள்.

(தொடர்ந்து வெளிவரும்.)

எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அசாமிலேயே நிறுவப்படல் வேண்டும்

டெல்லியுடன் போராடுவதற்காக 25,000 தொண்டர்கள் தயார்!

நிபுணர் குழு சிபாரிசுகளை வெளியிட டெல்லி மறுக்கிறதா?

ஷில்லாங், டிச. 25—

டில்லி நிறுவ உத்தேசித்திருக்கும் மற்றுமொரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாம் மாநிலத்திலேயே நிறுவ வேண்டும் என்பதற்காக அந்த மாநிலத்தவர், சுமார் 25,000 தொண்டர்களைச் சேர்த்து பெரியதொரு 'சத்தியாக்கிரக இயக்கம்' நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த இயக்கம், கடந்த சமீப காலமாக இந்தக் கோரிக்கைக்காக சிற்சில ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் நடத்திவந்திருக்கிறது.

நிபுணர் குழு

உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை எங்கு நிறுவலாம் என்பதை ஆய்ந்தறிந்து கூறுவதற்காக டில்லி நியமித்த நிபுணர் குழு தனது அறிக்கையைத் தந்துவிட்டதாம்.

ஆனால் சர்க்கார் இன்னும் அந்த அறிக்கையை வெளியிடவோ, அல்லது அதுபற்றி தனது முடிவை அறிவிக்கவோ இல்லை.

பத்திரிகைச் செய்தி

இந்த நிலையில், டில்லியில் உள்ள சில பத்திரிகைகள் 'அசாம் மாநிலத்தில் அத்தொழிற்சாலை இல்லை,' என்று நிபுணர் குழு தீர்ப்பளித்து விட்டதாக வெளிவந்த செய்திகள், அசாம் மக்களிடை ஆத்திரத்தையும் எழுச்சியையும் ஊட்டியுள்ளனவாம்.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை நிர்மாணச் செயற்குழு உடனடியாக 25,000 போராட்ட வீரர்களைத் தயாரிக்குமாறு, மாநிலமெங்கணுமுள்ள தமது கிளைக் குழுக்களுக்கு தாக்கீது அனுப்பியுள்ளதாம்.

கம்யூனிஸ்டுகள்

அசாம் மாநில கம்யூனிஸ்டுகள் கூட இந்த இயக்கத்திற்கு ஆதரவு தந்து வருவதாகவும், 'அசாமில் அத்தொழிற்சாலை இல்லையானால் இயக்கம் அமைதியான முறையில் தொடர்ந்து நடைபெற வேண்டும்' என்று கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

மந்திரி சபை இராஜினாமா

அசாமில் தொழிற்சாலை அமையாவிட்டால் அசாம் மாநில மந்திரி சபையும், அசாமிலிருந்து சென்றுள்ள மக்கள் சபை உறுப்பினர்களும் இராஜினாமாச் செய்ய வேண்டும்' என்றும் கம்யூனிஸ்டுகள் கோருகின்றனராம்.

ஆறு உறுப்பினர்கள்

மக்கள் சபை உறுப்பினர்கள் ஆறு பேர் கூடி டில்லியிலிருந்து வெளித்தள்ள அறிக்கையில், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அசாமில் நிறுவப்படுவதற்கு ஆதாரவாகவே நிபுணர்கள் கருத்தறிவித்திருப்பதாகக் கூறியிருக்கின்றனராம்.

தொழில்நுட்ப ரீதியிலும் நிதி நண்ணோட்டத்திலிருந்தும் பார்த்தால், அசாமில் தொழிற்சாலை நிறுவுவது சாத்தியமானது என்பதுடன், இலாபகரமானதுங்கூட என்றே விசாரணைக் குழு உறுப்பினர் அனைவரும் கருத்தறிவித்திருக்கின்றனர் என்றும் அந்த

(4-ம் பக்கம் பார்க்க)

பெண்களை அலட்சியப்படுத்தாதீர்!

இந்தூர், டிச. 25—

"எந்த ஒரு சமுதாயம் அதில் வாழும் பெண்களின் தேவைகளை அலட்சியப்படுத்துகிறதோ, அந்தச் சமுதாயம் தன்னைத்தானே அலட்சியப்படுத்திக்கொண்டதாகும்" என்று, அகில இந்திய பெண்கள் சங்கத் தலைவி திருமதி இலட்சுமி மேனன் கூறியிருக்கிறார்.

'நமது சகலதுறை நலன்களையும் பாதுகாப்பவர்கள் பெண்கள்தான் என்பதால் அவர்கள் முன்னேறுவதற்கு எல்லா வாய்ப்புகளும் அளிக்கப்படவேண்டும்' என்றும் அவர், சங்கத்தின் 26-வது மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—12—'56 புதன்

தேர்தல் திருவிளையாடல்!

விசைத்தறித் திணிப்பை உள்ளடக்கமாகக்கொண்ட நெசவுக் கொள்கை ஒன்றைப் புதிதாக மக்கள்மீது திணிக்கப் போவதாக சென்ற ஜூன் திங்களில் இந்தியப் பேரரசு அறிவித்திருந்தது.

கைத்தறித் துறையில் ஈடுபட்டுவரும் நெசவாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகவும், இரண்டாவது திட்டத்தின் விளைவாக, திட்டக் காலத்தில் தேவைப்பட இருக்கும் மிகுதியான துணித் தேவையை நிரப்புவதற்காகவுமே விசைத்தறி ஏற்பாடு மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று, இந்தியப் பேரரசு சமாதானம் கூறியது. அதாவது, ஒவ்வொரு நபருக்கும் 18.5 கெசம் வீதம் துணித் தேவை பெருகக் கூடும் என்றும், அதனால் மொத்தத்தில் 170 கோடி கெசம் துணி கூடுதலாகத் தேவைப்படும் என்றும் இந்தியப் பேரரசு கணக்கிட்டிருக்கிறது. அவ்வாறு தேவைப்படும் துணியின் மொத்தத்தில் 100 கோடி கெசத் துணியை, கைத்தறித் துறைக்கு இந்தியப் பேரரசு ஒதுக்கியுள்ளது.

கைத்தறித் துணிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 100 கோடி கெசத் துணியில், 70 கோடி கெசத் துணியை ஆலைகளில் உற்பத்திச் செய்யப்படும் நூலைக் கொண்டும், மீதமுள்ளவற்றை கையால் நூற்கப்பட்ட நூலைக் கொண்டும் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று இந்தியப் பேரரசு திட்டமிட்டுள்ளது.

அதுவுமன்றி, 20 கோடி கெசத் துணியை விசைத் தறி மூலமும், அம்பர் சர்க்காவினைக் கொண்டு 30 கோடி கெசத் துணியையும் உற்பத்திச் செய்ய வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அப்படி விசைத்தறி மூலம் உற்பத்திச் செய்யவேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ள 20 கோடி கெசத் துணியை உற்பத்திச் செய்ய மொத்தத்தில் 35,000 விசைத்தறிகளைப் புகுத்துவது எனவும், இந்தியப் பேரரசு வரையறுத்துள்ளது.

இப்புதிய விசைத்தறியைப் புகுத்தும் புதிய நெசவுக்கொள்கையை, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் உள்ள கைத்தறித் துறையினர் பலமாக எதிர்த்தனர். பெரும்பான்மையினரான காங்கிரசுக் கட்சியினர் உள்ளிட்ட மற்ற அரசியல் கட்சியினர் அனைவரும் மேற்படி புதிய கொள்கையை வன்மையாகக் கண்டித்தனர்.

ஒருமிக்கக் கிளம்பிய இப்பலத்த எதிர்ப்பை இந்தியப் பேரரசு பொருட்படுத்தவில்லை. எப்படியும் புதிய கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்றும் பிடிவாதமாகக் கூறிவிட்டது.

தனது முடிவிற்கு ஒப்ப விசைத்தறிகளைக் கொள்முதல் செய்யவும் முனைந்துவிட்டது. சில தறிகளை வாங்கியும் விட்டது.

இவ்வளவும் மேற்கொள்ளப்பட்ட பிறகு, விசைத்தறி ஏற்பாட்டை கைவிட்டுவிட இந்தியப் பேரரசு முடிவு கட்டி இருப்பதாக சில நாட்களுக்கு முன் ஒரு செய்தி வந்தது. அந்தத் தகவலை வர்த்தக மந்திரி மொரார்ஜி தேசாயே வெளிப்படையாகக் கூறி இருப்பதாகவும் செய்தியில் அடங்கி இருந்தது. அத்தகுதகவல்வெளியான அதே நேரத்தில் அமைச்சர் பக்தவத்சலனாரும், 'கைத்தறித் துறையில் விசைத்தறி புகுத்தலை சென்னை அரசாங்கம் எதிர்க்கிறது' என்று சென்னை சட்டசபையில் அறிவித்திருந்தார். அவ்வாறு அறிவித்த அளவுடன் நின்றுவிடாது அமைச்சர் "கைத்தறித் துறையின் நிலையான நன்மைக்காகவே விசைத்தறியைப் புகுத்துவதை மத்திய அரசாங்கமும் சென்னை அரசாங்கமும் விரும்புகிறது" என்றும் அறிவித்திருந்தார்.

விசைத்தறி புகுத்தல் பற்றி எழுந்த மற்றொரு வினாவிற்கு அதே அமைச்சர் பதில் தரும் பொழுது 'விசைத்தறி புகுத்தல் பற்றி சென்னை அரசாங்கம் யோசித்துக்கொண்டு இருக்கிறது' என்று தெளிவற்றத் தன்மையில் குறிப்பிடவும் செய்தார். இவ்வளவும் ஒருபுறம் இருக்க, சென்னைக்கு வந்த மொரார்ஜி தேசாயோ, 'விசைத்தறி ஏற்பாடு நிறைவேற்றப்பட்டே தீரும்' என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். அவர் கூற்றை மேலும் உறுதி செய்யும் வகையில் இந்தியப் பேரரசு சுற்றறிக்கை ஒன்றும் விட்டிருக்கிறது. நிற்க,

விசைத்தறி புகுத்தப்படுவதினால் கைத்தறிகளுக்குப் பாதகமேற்படாது என்று சென்னை தொழிலமைச்சர் சொல்லி வருகிறார். அதற்கு எடுத்துக்காட்டாக சின்னாளப்பட்டியில்செயலாற்றப்பட்டுவரும் இரண்டு விசைத்தறிகளினால் கைத்தறிகளுக்குப் பாதகம் எதுவும் ஏற்படவில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால் அமைச்சர் மொரார்ஜி தேசாயோ, விசைத்தறி ஏற்பாட்டால் கைத்தறித் துறை ஒரேயடியாக நசித்துவிட நேரும் என்று விளக்கியுள்ளார். "50 விசைத்தறிகள் மேற்கொள்ளப்பட்டால் 500 கைத்தறிகள் வேலையிழக்கும். 500 நெசவாளர்களுக்குப் பதிலாக 50 நெசவாளர்களே தேவைப்படுவர்" என்று குறிப்பிட்டு, விசைத்தறி ஏற்பாட்டினால், கைத்தறித் தொழிலுக்கும், அவைகளையே நம்பி வாழ்ந்து வரும் நெசவாளர்களுக்கும் ஏற்பட இருக்கும் பெரு நாசத்தைத் தெளிவாக்கியுள்ளார். அந்த அமைச்சர் மேலும் சென்று 'குறிப்பிட்ட ஒரு இடத்தில் விசைத்தறி புகுத்தப்படுமானால், அது வெறும் தற்காலிக ஏற்பாடாக இருக்க முடியாது. விசைத் தறிகள் கூட்டப்பட்ட உடனே, கைத்தறிகள் செயலற்றுப் போகும்' என்றும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

"விசைத் தறிகளை எதிர்க்கின்றவர்களிடம் நான் தனித்த முறையில் அனுதாபப்படுகிறேன்."

இப்படி விசைத்தறி எதிர்ப்பாளர்களிடம் அனுதாபம் தெரிவித்திருப்பவரும் அதே அமைச்சர்தான்!

இந்தியப் பேரரசு அமைச்சர் தந்துள்ள விளக்கத்தின் மூலம் விசைத்தறி ஏற்பாட்டினால் கைத்தறித் துறை மெள்ள மெள்ள நசித்துவிடும் என்பதும் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலையிழந்துத் தவிக்கக்கூடும் என்பதும் நிச்சயமாகத் தெரிந்துவிட்டது.

விசைத்தறி ஏற்பாட்டிற்கு எதிராக இருக்கும் அனைவரும் அமைச்சர் கூறிய நியாயத்தைக் காட்டிதான் திட்டத்தை எதிர்க்கிறார்கள். திட்டத்தை எதிர்ப்பதற்கு, எதிர்ப்பாளர்கள் கூறிய காரணத்தை டில்லி அமைச்சர் அப்படியே ஒப்புக்கொண்டுவிட்டார்.

இந்த நிலையில், விசைத்தறித் திணிப்பை சென்னை போன்ற மாகாண அரசாங்கங்கள் பிடிவாதமாகத் திணிக்க முன்வருமானால், அதன் பலனாக நெசவாளர்களின் ஆதரவைக் கண்டிப்பாக இழக்கவேண்டி ஏற்படும் என்ற உண்மை இந்தியப் பேரரசிற்குத் தெளிவாகத் தெரியவும் தெரிகிறது. விசைத்தறித் திட்டத்தைக் கைவிட்டு விடவும் அதற்கு மனமில்லை. எனவே, திட்டத்தைக் கைவிடாமலும், அதே நேரத்தில் நெசவாளர்களின் ஆதரவைப் பெறத் தக்க வகையிலும், ஒத்து இருக்கக்கூடிய ஒருமுறையைப் பின்பற்றுவதற்கு இந்தியப் பேரரசு முன்வருகிறது.

அதாவது, "விசைத்தறி ஏற்பாட்டிற்கு எதிராக ஏதாவது ஒரு மாகாண அரசாங்கம் முடிவு கட்டுமானால், தன்னுடைய கருத்தை ஏற்கவேண்டும் என இந்தியப் பேரரசு வற்புறுத்தாது" என்ற ஒரு புதிய நியாயத்தைப் பேச, இப்பொழுது இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கிறது.

இந்தியப் பேரரசு கூறும் இப்புதிய நியாயம் பற்பல கேள்விகளுக்கு இடமளிப்பதாக இருக்கிறது என்பது வெளிப்படை.

இப்புதிய நியாயத்தையும் ஒரு தேர்தல் ஏற்பாடாகத்தான் எவரும் கொள்ளுவர்.

'ஏழ்மை, பிணி இவற்றால் மக்கள் அவதியுறுகின்றனர்'

நாட்டு நிலைக்கு டில்லிப் பேரரசின் நிதி அமைச்சர் தரும் 'நற்சான்று'

"ஒரு நிதி மந்திரி, அல்லது காங்கிரஸ் கட்சிக்காரன் என்ற முறையில் மட்டுமல்லாது, ஒரு மனிதன் என்ற முறையிலும் நான், நாட்டைச் சுற்றிப் பார்த்தேன்; எங்கும் ஏழ்மை, அழிவு, பிணி இவற்றால் மக்கள் அவதியுறுவதைக் கண்டேன்; இந்த விஷயத்தில்தான் எல்லா மக்களும் ஒன்றுபட்டிருக்கின்றனர்.

"மிகச் சுகாதாரக் கேடான சுற்றுப்புறங்களுடன் கூடிய குடிசைகளில் மக்கள் வாழ்கின்றனர்.

"இது குறித்து ஏதேனும் செய்யவேண்டிய கடமை எனக்கில்லையா?

"எனவே, சர்க்கார் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் சாதாரண ஏழை எளிய மக்களின் வாழ்வில் சிறிதேனும் மகிழ்ச்சியை யூட்டுவதாக இருக்கவேண்டும்,"

என்று மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, புதிய ஞானோதயம் பெற்றவர்போலப் பேசியிருக்கிறார், சென்னைக் கூட்டம் ஒன்றில்.

ஆனால் அவரது இந்தக் கருத்து, நாட்டு நிலைக்கு, டில்லி சர்க்கார் மந்திரி ஒருவர் தரும் நற்சான்றாகும்.

டில்லியின் புதிய சட்டம்?

வெளிநாடு சென்று வயிறு கழுவ நினைப்போருக்குப் பேரிடி?

வெளிநாடுகளுக்குச் சென்று பிழைத்துவருவோரைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய சர்க்கார் புதிய முறையொன்றை மேற்கொள்ளப்போவதாக இந்தியாவிலிருந்து இரங்கூன் வந்துசேரும் பிரயாணிகள் கூறுகிறார்கள்.

1 வெளிநாடுகளிலுள்ள இந்தியாகள், தாயகம் சேர்ந்தவுடன் இனி வெளிநாட்டுக்கே செல்லுவதில்லை என்பதாக தங்களுடைய 'பாஸ்போர்ட் விசா'க்களை 'இந்திய இமிகிரேஷன்' அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டால் இந்திய அரசியலார் இந்தியாவில் வர்த்தகம் செய்வதற்காகவேண்டி ரூ. 1,000 கொடுப்பதாகவும், அந்த ரூபாயை 4 தவணைகளில் செலுத்திவிட வேண்டுமென்பதாகவும் சொல்லப்படுவராம்.

2. இந்தியாவிலிருந்து வெளிநாட்டுக்குச் செல்லும் ஒருவர் இந்தியத் துறைமுகத்தில் ரூ 250 முன்தொகை கட்டவேண்டுமென்றும், அவர் வெளிநாடுகளில் ஒரு வருடத்துக்குமேல் தங்காமல் திரும்பிவிட வேண்டுமென்றும் அறிவிக்கப்படுவாராம்.

இந்த முறைகள் இந்தியாவில் 1957-ம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வரப்போவதாகவும் வதந்திகள் உலாவுகின்றனவாம்.

தமிழ்நாட்டிற்குப் பட்டை நாமம்!

புதுடில்லி, டிச 24—

1956—57-ம் ஆண்டில், காசநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு 637 படுக்கைகள் ஏற்படுத்த பல்வேறு மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் ரூ 3,98 125 செலவிட அனுமதியளித்துள்ளது.

இந்தத் தொகையில் ஆந்திரத்திற்கு 93,750; பீகாருக்கு 1,25 000; பம்பாய்க்கு 15,625; இமாசலப் பகுதிக்கு 6,250; கேரளத்திற்கு 45 000; மத்தியப் பிரதேசத்திற்கு 50,000; மைசூருக்கு 31,250; உத்திரப் பிரதேசத்திற்கு 31,250 ரூபாய்கள் தரப்படுகிறது.

பணமல்ல பிரச்சினை; பலனுண்டா என்பதே!

புதுடில்லி, டிச. 24—

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் துவக்கக் காலத்திலிருந்து இதுவரை ரூ. 5½ இலட்சம் செலவாகியுள்ளதென்றும் அடுத்த ஆண்டிற்காக ரூ 40 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் மாநிலங்கள் சபையில் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

தாமோதர் பள்ளத்தாக்கு அணைத் திட்டம்

ரூ. 86¼ கோடி செலவு

புதுடில்லி, டிச. 24—

1955-56-ம் ஆண்டில் தாமோதர் பள்ளத்தாக்கு அணைத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 86·57 கோடி செலவிடப்பட்டுள்ளதாம்.

மத்திய அரசாங்கம் ரூ. 22 66 கோடியும், மேற்கு வங்கம் ரூ. 48 44 கோடியும் பீகார் ரூ. 15·98 கோடியும் இந்தத் திட்டத்தின் செலவிற்காக 1955-56-ம் ஆண்டில் அளித்துள்ளதாம்.

மாஸ்கோ பண்பாடு!

சென்ற 21-ந் தேதியன்று ஸ்டாலினுக்கு 77 வயது பூர்த்தியாயிற்று; சென்ற ஆண்டில் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஏடான 'பிராவ்தா' முதல் பக்கத்தில் அவருடைய படத்தைப் பெரிதாக வெளியிட்டு, 'லெனினின் சீடர்—வாரிசு,' என்று பெருமைப்பட எழுதியிருந்தது.

இந்த ஆண்டில், ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் பற்றி ரஷ்ய ஏடுகள் ஒன்றும் பிரமாதப்படுத்தவில்லை.

சேலத்தில் செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள்

"29—12—56 பிற்பகல் 2-மணிக்கு, தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம், சேலம் செண்டிரல் டாக்கீசுக்கு எதிரில் உள்ள தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

"30—12—56 காலை 10-மணிக்கு, அன்னதானப்பட்டி (27-வது வட்டம்) பிட்டா ரைஸ் மில்லில் பொதுக்குழுக்கூட்டம் நடைபெறும்.

"அந்த ரைஸ் மில்லிலேயே, எல்லா உறுப்பினர்களுக்கும் தங்கவும் குளிக்கவும் நல்ல முறையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

"செயற்குழு உறுப்பினர்களுக்கும், பொதுக் குழு உறுப்பினர்களுக்கும், காலை, பகல், மாலை, இரவு உணவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"ஜோலார்பேட்டை வழியாகச் சேலம் வருகிறவர்கள் சேலம் சந்திப்பு இரயில் நிலையத்தில் இறங்க வேண்டுகிறோம்.

"விருத்தாசலம் வழியாக வருகிறவர்கள் சேலம் மார்க்கட் இரயில் நிலையத்தில் இறங்க வேண்டுகிறோம்.

"கூட்டங்களில் கலந்து கொள்ள வரும் உறுப்பினர்களை, இரயில் நிலையங்களிலிருந்து கழகத் தோழர்கள் அழைத்துச் செல்வார்கள்.

"பஸ் மூலம் வருகிறவர்கள், பஸ் ஸ்டாண்டில் இறங்கினால் அங்கிருந்தும் கழகத் தோழர்கள் அவர்களை அழைத்துச் செல்வார்கள்.

"பொதுக்குழு நடைபெறும் ரைஸ் மில்லில் டெலிபோன் அமைக்கப்பட்டிருக்கிறது. (டெலிபோன் எண். 544).

"செயற்குழு, பொதுக் குழுக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் ஒழுங்கு பெற நடைபெற்று வருகிறது.

"30—12—56 மாலை 6-30 மணிக்கு 'வி' மார்க்கெட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்."

என்று, சேலம் நகர தி. மு கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன்

தேர்தல் நெருங்குகையில் காங்கிரசாரின் தந்திரம்

என். வி. என். அம்பலப்படுத்துகிறார்

தமிழை ஆட்சிமொழியாக்குவதற்கு இத்தனை தாமதம் ஏன்?

சாலைகள் புதுப்பிக்கப்படுவதன் நோக்கம் என்ன?

சென்னை கூட்டத்தில் இடித்துரை

"இந்த மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்குமாறு தி. மு. கழகம் மட்டுமா கேட்டது? கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமா கேட்டது? தமிழரசுக் கழகமும், சோஷலிஸ்டுக் கட்சியும் மட்டுந்தானு கேட்டன? காங்கிரசிலேயே இருந்து பணியாற்றிய விருதுநகர் வீரர் சங்கரலிங்கனரும் கேட்டார். அவரது கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. அதனை மீண்டும் வற்புறுத்த 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார். அப்போதும் இந்தக் காங்கிரசாருக்கோ காமராசருக்கோ மனிதாபிமானம் உண்டாகவில்லை.

"ஒரு தி. மு. கழகத் தோழர் உண்ணாவிரதம் இருந்தாலாவது அவர்கள் கவலைப்பட வேண்டாம்; ஏனென்றால், அவர் எதிர்க் கட்சி. ஆனால், காங்கிரசையே சேர்ந்த நியாகி சங்கரலிங்கனர் எதற்காக உண்ணாவிரதம் இருந்தாரோ, அதன் இலட்சியத்தையே அவர்கள் பொருட்படுத்தவில்லை; பட்டம் பதவி பெறவா அவர் உண்ணாவிரதம் இருந்தார்? இல்லையே!

"அவருடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த நேரத்தில்கூட விருதுநகரில் இருந்த அவரை, விருதுநகர்வாசியான காமராசர் போய்ப் பார்த்தாரா? அத்தகைய மதோன்மத்தராக அல்லவா காமராசர் இருந்திருக்கிறார்?

'அந்த மாபெருந் தியாகி சங்கரலிங்கனரை அண்ணா அவர்கள் சந்தித்தார்கள்; அப்போது அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'நாங்கள் காங்கிரஸ் கட்சிக்காக உழைத்தோம்; பாடுபட்டோம்; வெள்ளையர்கள் நீட்டின துப்பாக்கி முனைகளுக்கு எங்கள் மார்பைக் காட்டினோம்; ஆனால், இன்று அதே காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், மதோன்மத்தர்களாகத் திரிகின்றனரே—சொந்த நாட்டிற்கு அதன் சொந்தப் பெயர் கொடுக்க மனமில்லாத சோரனையற்றவர்கள்' என்று குறிப்பிட்டார். 'நான் உங்களை இதுவரையிலும் எதிர்க் கட்சியினராகவே கருதினேன்; உங்கள் பேச்சுக்களால் மனக்கசப்பில் இருந்த நான், நீங்கள் என்னைப் பார்க்க வந்ததும் ஆறுதலடைகிறேன்; இப்போதுதான் நான் உணருகிறேன்—தி மு. கழகம் தமிழ் மொழிக்காகவும், தமிழ்நாட்டுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் பாடுபடும் முக்கிய கட்சி என்பதை' என்று கூறி அண்ணா அவர்களின் கரங்களைப் பற்றிக்கொண்டு கண்ணீர் வடித்தார்.

"ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்பதைப்போல், வருகிற தேர்தலின்போது காங்கிரசார் ஓட்டுப்போடச் சாவடிக்குச் செல்லும்போது, அங்கு சங்கரலிங்கனரின் கண்ணீர்த் துளிகள் மனக் கண்முன்பு வரத்தான் செய்யும்.

"இந்தத் தேர்தலிலே நீங்களெல்லாம் காங்கிரசுக்கு ஆதரவு தந்தால் சங்கரலிங்கனர் போன்ற தியாகிகளுக்கெல்லாம் துரோகம் செய்தவர்களாவீர்கள்; அந்தத் தியாகிகள் சந்ததியிலிருக்கும் தாயகத்திற்கும் துரோகம் செய்தவர்களாவீர்கள்."

என்று, 21—12—56-ல் நடைபெற்ற சென்னை—கீழ்ப்பாக்கம் 22-வது வட்ட தி. மு. கழக ஆண்டுவிழாவில் பேசுகையில், துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் வேலையின்றித் தவித்தனர் மந்திரிகளேகூடச் சொன்னார்கள்—'சுமார் ரூ. 10 இலட்சம் பெறுமான கைத்தறித் துணி தேங்கி கிற்கிறது,'—என்று! ஆனால் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இதையெல்லாம் பொதுமக்களாகிய நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

நெசவாளர் துயர் துடைக்க...!

"அந்த நேரத்தில், சாமானியர்களின் கட்சியான தி. மு. கழகம்தான் நெசவாளர் பெருமக்களைக் கைகொடுத்துத் தூக்கிவிட்டு, அவர்களுடைய வாழ்க்கையில் கொஞ்சம் வெளிச்சத்தைக் காட்டிற்று! அண்ணா அவர்கள் அப்போது கேட்டுக்கொண்டபடி தி. மு. கழகத் தோழர்களெல்லாம், ஆங்காங்குள்ள கிளைக் கழக உறுப்பினர்களெல்லாம் அந்தக் கைத்தறித் துணிகளைத் தோளின்மேல் போட்டுத் தெருத்தெருவாக வந்து விற்பனை செய்தனர். அப்படி அவர்கள் தோளில் சுமந்து விற்றது மட்டும் ரூ. 5 இலட்சம் பெறுமான துணி! இப்படி, நெசவாளர்கள் துயரப்பட்ட நேரத்திலே துணிகளைத் தோளில் சுமந்து 5 இலட்சம் ரூபாய் வரைக்கும் விற்பனை செய்த மகத்தான காரியத்தை இந்த நாட்டில் உள்ள வேறு எந்தக் கட்சி செய்திருக்கிறது? கூறமுடியுமா?

என்னதான் செய்தனர்?

"அதிகாரம் கையிலிருக்கிறது காங்கிரஸ் கட்சிக்கு; சட்டசபையில் கை தூக்க 150 பேர் இருக்கிறார்கள்; மெஜாரிட்டி உறுப்பினர்களைக்கொண்டு ஆளும் கட்சியாக அது இருக்கிறது; என்றாலும் இதையாவது அவர்கள் செய்ததென்ன?

ஏகோபித்த தீர்மானம் என்னவாயிற்று?

"சட்ட சபையிலேகூட முன்பு ஒருதடவை தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது—'கைத்தறித் தொழிலாளர்களுக்கு நிரந்தர வாழ்வு வேண்டுமென்றால், அவர்களுக்கெனச் சில வேலைகளை நிரந்தரமாக ஒதுக்கவேண்டும்;'—என்று! அதை யாரும் எதிர்க்கவில்லை; எல்லோரும் ஒருமுகமாக ஆதரித்தனர்; எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம் என்னவாயிற்று? டில்லி சென்றது தீர்மானம்; தீர்மானத்தை வரித்துவிட்டு, அப்போது அவ்விருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி, தொட்டியில் வீசி எறிந்தார்.

இந்த சர்க்கார் இனியும் தேவையா?

"இந்த மாதிரி சர்க்காருக்கு உள்ளபடியேகொஞ்சம் 'சொரணை' இருந்திருந்தால், 'நாம் ஒருமுகமாக நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார்களே' என்று வருந்தியிருக்கமாட்டார்களா? அப்படிச் செய்த டில்லி சர்க்காரை எதிர்க்கவேண்டும் என்ற துணிவு கொஞ்சங்கூட இல்லாமல் வாய் மூடிக்கிடந்தனர். இப்படிப்பட்ட ஒரு சர்க்கார் இனியும் தேவைதானு என்பதை நீங்களெல்லாம் எண்ணிப்பாருங்கள்.

தேர்தலுக்காகவா இந்த ஜாலவித்தை?

"இந்த நாட்டின் ஆட்சி மொழியாகத் தமிழ் ஆக்கப்படவேண்டும் என்பதைத் தி. மு. கழகம் வலியுறுத்தி வருகிறது. இவ்வளவு காலமும் சும்மா இருந்துவிட்டு, இரண்டு மூன்று நாட்களுக்குமுன்னே விழா ஒன்றில் பேசும்போது அமைச்சர் சுப்பிரமணியம், சீக்கிரமே தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்; என் இப்போது கூறுகிறார்? தேர்தல் நெருங்குகிறது. அத்தேர்தலில் இப்படியெல்லாம் சொல்லி ஆசை காட்டினுல்தான் நமக்கு ஓட்டுப் போடுவார்கள் என்று கினைத்து இம்மாதிரியான ஜாலவித்தைகளையெல்லாம் செய்து வருகிறார்கள்.

"தேர்தல் நெருங்கி வருகிற இந்த நேரத்தில் ரோடுகளையெல்லாம் 'ரிப்பேர்' செய்து வருகிறார்கள். இதையெல்லாம் பொதுமக்கள் முக்கியமாகக் கருதக்கூடாது. இந்த நாட்டுப் பணம்—நாம் கொட்டிக்கொடுக்கும் வரிப்பணம் எவ்வளவு வடாடு செல்கிறது? நாம் அதிக வரி செலுத்துகிறோமே—என்றாவது, இந்த சர்க்கார் கடன்கார சர்க்காராக இருக்கிறதே? இதற்குக் காரணம் என்ன? நாம் கொடுக்கும் வரிப்பணம் வடாடு செல்லாமல் இம்மாதிரி ஜாலவித்தைகளிலேயே இருந்தால் இந்தக் கஷ்டம் நமக்கு இருக்குமா? அற்பப் பணத்தையெல்லாம் நாட்டு மக்களுக்கும் நமக்கும் நேரவையானதாகச் செய்யலாமே?—என்ற உணர்வு கொள்வதுதான் முக்கியமானதாகும். இவ்விருந்து டில்லிக்குச் செல்லும் பணத்தைத் தடுத்து நிறுத்தினுல்தான் இவ்குள்ள மக்கள் ஓளவு நிம்மதியாக வாழமுடியும் என்பதை மக்கள் உணரவேண்டும்.

அணிவகுத்துள்ள அசைக்கமுடியாத சக்தி!

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கும் ஒரே பட்டாளம், மக்கள்! அந்த மக்கள் தரும் நிதி குறைவாக இருக்கலாமே தவிர, அதற்குப் பின்னுல் இருக்கும் மகத்தான சக்தி—யாராலும் எக்காலும், எப்படியும் அசைக்க முடியாத சக்தி என்பதை உணருகிறோம். தேர்தலில் 150 இடத்திலே போட்டியிடுவோம். எல்லா இடங்களிலுமே ஒரு வேளை தி. மு. கழகம் தோற்றுவிட்டால்கூட அதற்காக காங்கள் சோர்க்கப்போவதில்லை.

தோல்வியால் 'தத்துவம்' அழிந்துவிடுமா?

"1950-ல், பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில், கம்யூனிஸ்டுக் கட்சி 100 இடங்களில் போட்டியிட்டது. ஆனால் முடிவு? 100 இடங்களிலுமே தோல்வி கண்டது. இத்தோல்வி கண்டதற்காக அக்கட்சி ஒன்றும் அழிந்துவிடவில்லை. அதுபோலவேதான் மறு ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் 10 இடங்களில் போட்டியிட்டு, அத்தப் பத்து இடங்களிலும் படுதோல்வி அடைந்தது! ஒரு இடத்தில்கூட வெற்றி இல்லை என்பதற்காக அந்தக் கட்சி செத்ததா? நசித்ததா? பொதுவுடைமைத் தத்துவமே அழிந்துவிட்டதா?

"அப்படிப்பட்ட ஒரு ஜனநாயகத்தை இந்த நாட்டில் அமைக்க வேண்டும் என்பதில் தி. மு. கழகம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறது."

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

தி. மு. கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு. க.' என்ற எழுத்துக்களும், கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்ளத்தற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணு 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது வெளியூர்க்கிளைகள் 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

பெண்களுக்குத் தனி ஓட்டுச் சாவடி

வரப்போகும் பொதுத் தேர்தலின்போது கிடையாதாம்

ஐதராபாத், டிச. 24—வரப்போகும் பொதுத் தேர்தலின்போது பெண்களுக்கெனத் தனி ஓட்டுச் சாவடிகள் வைக்கப்படமாட்டாதாம்.

சட்டசபைக்காக ஒரு பிரிவும், மக்கள் சபைக்காக ஒரு பிரிவும் கொண்ட ஓட்டுச் சாவடிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே வாக்களிக்க வேண்டி வருமாம்!

இந்தத் தகவலை, ஆந்திரப் பிரதேச பிரதம தேர்தல் அதிகாரி கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு சாவடியிலும் சுமார் 750 முதல் 1,000 வாக்காளர் வரை வாக்களிப்பார்கள்.

தமிழ் நாட்டின் இசைச் செல்வம்

புகழ் குன்றாது பாதுகாக்க வேண்டுகோள்

சென்னை, டிச. 24—"இசை உலகில் தமிழ் நாடு உயர்நிலையை எட்டியிருக்கிறது; பல நூற்றாண்டுகளாக இந்து இசைக் கலை ஒளி வளர்ந்திருக்கிறது. இசையே நாட்டுப் பண்பாட்டின் சின்னமாகும்; இசைக் கலையை மட்டுமின்றி மற்ற அழகுக் கலைகளையும் தமிழ் நாடு வளர்த்து வந்திருக்கிறது; பெருமைப்படத் தக்க ஒன்றான தமிழிசைச் செல்வத்தை நாம் போற்றிப் பாதுகாத்து வருவது அவசியமாகும்" என்று, டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் தமிழ் இசை விழாவை துவக்கிவைத்துப் பேசுகையில், மத்திய அரசாங்க நிலையே அமைச்சர் அழகேசன் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குக் கடற்கரையில் எண்ணெய் ஊற்றுகள்

டில்லி ஆராய்ச்சி நடத்தமாம்

எர்ணாகுளம், டிச. 24—மங்களூரிலிருந்து திருவனந்தபுரம்வரை மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் எண்ணெய் ஊற்றுகள் கண்டுபிடிப்பதற்காக பூசாய்வு ஆராய்ச்சி ஒன்றை டில்லி சர்க்கார் மேற்கொள்ளுமாம்.

எண்ணெய் ஊற்றுகள் பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் சர்க்கார், இந்த மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் நிபுணரான ஆராய்ச்சி நடத்தியாக வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறதாம்.

இந்தத் தகவலை டில்லி மத்திய மாளிகை பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள்

இனிய — எளிய மெட்டுகளில்

பிற கட்சிகளைக் கடுமையாகத் தாக்காத முறையில் — கேவலப்படுத்தாத தன்மையில்

நமது கொள்கை விளக்கம்

கொண்டதாக—

ஐந்தாண்டுத் திட்ட ஓரவஞ்சனையை

விளக்குவதாக—

அடக்குமுறைப் போக்கையும் சர்வாதிகாரத்தையும் கண்டிப்பதாக உள்ள

தி. மு. க. தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படத் தக்க பாடல்களை அன்புகூர்ந்து, எழுதி, 'நம் நாடு' இதழுக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

—'நம் நாடு' அலுவலகம்

கிறிஸ்துமஸ் விபத்துக்கள்

அமெரிக்காவில் 546 பேர்கள் பலிகொண்டன!

நியூயார்க், டிச. 25—

கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது ஏற்பட்ட கார் விபத்துகளினால் இதுவரை 546 பேர்கள் அமெரிக்கா முழுவதிலுமாகக் கொல்லப்பட்டிருக்கின்றனராம்.

கடந்த ஆண்டு, கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது மூன்று நாட்களில் 609 பேர் இதுபோன்ற விபத்துக்களினால் கொல்லப்பட்டனர்.

இந்த ஆண்டு, விபத்துக்களுக்குப் பலியாவோரின் எண்ணிக்கை சென்ற ஆண்டினைவிட அதிகமாயிருக்கும் என்று அஞ்சப்படுகிறதாம்.

சுமார் 4 கோடி மோட்டார் கார்கள் அமெரிக்காவில் ஓடிய வண்ணமாக இருக்கின்றனவாம்!

இது ஒரு திட்டமா?

இலங்கையிலிருந்து வெளியேறும் தமிழர் துயர் தீர்ந்துவிடுமா?

கோலை, டிச. 25—

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்துவரும் தமிழர்களின் நல உரிமைகளைக் கவனிப்பதற்காக திரு. பாஸ்கரத் தொண்டைமான் என்பவரை விசேட அதிகாரியாக டில்லிப்பேரரசு நியமித்திருக்கிறது.

அவர் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இலங்கையிலிருந்து வருவோரைச் குடியமர்த்தும் வேலையைக் கவனித்துக்கொள்வாராம்.

சென்னை சர்க்கார் கோரிக்கையின்மீது இந்தப் பதவியை டில்லிப் பேரரசு ஏற்படுத்தியதாம்.

பொதுத் தேர்தல்

பல கட்சியினருடனும் சர்க்கார் விவாதிக்கும்'

சென்னை, டிச. 24—

தேர்தல் பொறுப்பை ஏற்றுள்ள மந்திரியான சி. சுப்பிரமணியம் வரும் ஜனவரி 10-ந் தேதியன்றில் மாநிலத்தில் உள்ள பல கட்சித் தலைவர்களுடனும் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து விவாதிப்பார் என்றும், இந்த ஆலோசனைக் கூட்டம் சென்னை சர்க்கார் அலுவலகத்தில் நடைபெறும் என்றும், முதல் மந்திரி காமராசர்கூட அதில் கலந்துகொள்ளக்கூடும் என்றும் கூறப்படுகின்றது.

சுரங்க இயந்திர உற்பத்திச்சாலை

வடநாட்டிலேயே அமையும்?

கல்கத்தா, டிச. 26—

சுரங்கத்திலிருந்து நிலக்கரி எடுப்பதற்குத் தேவையான இயந்திரங்களை இந்தியாவிலேயே தயாரிக்க மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையை வடநாட்டிலுள்ள துர்காபூர் என்ற பகுதியில் அமைப்பதற்கு ரஷ்ய நிபுணர்கள் யோசனை கூறியுள்ளனராம்.

தேர்தல் நிதி தாரீர்!

★

		ரூ.	அ.	பை
வரவு:				
முன் (24—12—56) இதழ்ப்படி		32,084	2	1
வல்லம்படுகை தி. மு. கழகம்	....	35	4	0
வ. அரங்கசாமி கொண்டல் வள்ளுவக்குடி சீர்காழி	....	17	0	0
பொருளாளர் தி. மு. கழகம் சங்கராபுரம்	....	2	4	0
மேல்பட்டாம்பாக்கம் தி. மு. கழகம் (தெ. ஆ.)	....	51	0	0
கீளச்சீவற்பட்டி தி. மு. கழகம் (இராமநாதபுரம் மாவட்டம்)	....	5	0	0
பூவைமாநகர் பகுத்தறிவு மன்றம்	....	5	0	0
அய்யம்பாளையம் தி. மு. கழகம் (மதுரை மாவட்டம்)	....	36	0	0
சங்கரலிங்கனர் மன்றம் மேலப்பட்டி (மேலூர் வட்டம்)	....	5	0	0
பரங்கிப்பேட்டைத் தி. மு. கழகம் (தெ. ஆ.)	....	13	0	0
வி. பெ. சங்கரன் கலடவீதி விழுப்புரம்	....	50	0	0
கே. எம். சுப்பிரமணியம் வால்பாறை	....	10	0	0
மறுமலர்ச்சி நாடக மன்றம் தாராபுரம் ஓமலூர்	....	25	0	0
நெடும்பலம் தி. மு. கழகம்	....	25	0	0
இடையகோட்டை தி. மு. கழகம்	....	10	0	0
சுந்தரபாண்டியம் தி. மு. கழகம்	....	20	0	0
சென்னை—தேனும்பேட்டை மக்கள் முற்போக்கு மன்றத் துவக்க விழா கூட்டம் தோழர் ஆசைத்தம்பி மூலம்	....	12	9	9
23—12—56 அன்று சென்னை 28-வது வட்டத் தி. மு. கழக ஆண்டு விழாக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 690—3—0: விவரம் வருமாறு:—				
28-வது வட்டத் தி. மு. கழகம்	....	105	0	0
திருமதி எஸ். ஜி. வள்ளியம்மாள் (தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களின் அன்னையார்)	....	501	0	0
28-வது வட்டத் தி. மு. கழக அனுதாபிகள்	....	37	3	0
ஆண்டு விழா உண்டியல் மூலம்	....	37	0	0
இராசப்பசெட்டித் தெரு, காய்கறி வியாபாரி புதுவை-சாரங்கபாணி	....	10	0	0
அரக்கோணம் சுவால்பேட்டை தி. மு. க.	....	1	0	0
சென்னை 48-வதுவட்டத் தி. மு. கழகம்	....	10	0	0
சி. கே. பலராமன்-கோவை	....	5	0	0
விருதுநகர் தி. மு. கழக செயலாளர் சுப்பிரமணியம் வசூல் செய்து அனுப்பியது ரூ. 246. விவரம் :-				
எம். எஸ். சி. நாராயணசாமி	....	25	0	0
வா. அ. சங்கரபாண்டியன்	....	25	0	0
வ. பெ. வடிவேல்	....	25	0	0
அ. க. ப. சண்முகசுந்தரம்	....	25	0	0
2—12—56 கூட்டத்தில் உண்டியல் வசூல்	....	8	15	6
சினிமா தியேட்டர் உண்டியல் வசூல்	....	30	13	7
கட்டையாபுரம் எம். ஜி. ஆர். ஒளியகம்	....	8	6	9
அறிவியல் மன்றம்	....	0	9	7
வீராலித் தெரு அண்ணா மன்றம்	....	8	8	0
எம்.எஸ்.பி. செந்திக்குமார் நினைவுப்படிப்பகம்	....	11	10	0
வி. வி. ஆர். படிப்பகம்	....	2	4	0
கழகத் தோழர்கள் வேடம் பூண்டு உண்டியல் மூலம் வசூலித்தது.	....	23	7	0
தோழர்கள் எஸ். ரத்தினம், கருப்பையாமூலம்	....	51	5	7
திருத்துறைப்பூண்டி தி. மு. கழகத் தேர்தல் நிதிக் கமிட்டியினர்—அதன் தலைவர் மூலம்	....	161	0	0
25—12—56 சென்னை பக்கிங்காம்-கர்னடிக்மில் தொழிலாளர் நிதி அளிப்புக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மூலம் ரூ. 633—9—0: விவரம் வருமாறு:—				
பக்கிங்காம்-கர்னடிக் மில் தொழிலாளர்கள்	....	518	2	6
கொத்தனர் சொசைடி சார்பில் மேஸ்திரி சாம்பசிவம் மூலம்	....	16	10	9
தோழர் ரத்தினசபாபதி	....	1	0	0
கூட்ட உண்டியல் வசூல்	....	9	9	6
சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்றம், திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம், தி. மு. க. படிப்பகம் 24-வதுவட்டம்	....	88	2	3
ஆக மொத்தம் ரூ.		34,152	15	10

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

'தெய்வத்தின் துணையை தேர்தலில் சோதிக்கட்டும்'

அமைச்சர் பக்தவத்சலம் புதிய யோசனை கூறுகிறார்!

"தெய்வத்தின் திருவருளினால்தான் எல்லாம் நடக்கிறது என்று எண்ணிக்கொண்டு, தேர்தலின்போது உறுப்பினர், வீட்டில் உட்கார்ந்துகொண்டே, தெய்வத்தின் துணையால் வெற்றி பெற முடிகிறதா என்று செய்து பார்க்கட்டும்; அந்த அனுபவத்தைப் பிறகு தெரியப்படுத்தினால் கல்லது."

இந்தப் புதிய யோசனையை, சென்னைசட்டசபையில், செயற்கை முறையில் மழை பெய்யச் செய்வதற்கான பரீட்சார்த்த சோதனைத் திட்டம் பற்றிய உறுப்பினரொருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

"மழை பெய்வதும் பெய்யாததும் இறைவன் திருவருள் என்று மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்; ஆகவே, செயற்கை மழை உற்பத்தித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை, மக்களிடையே தெய்வ பக்தியைப் பரப்புவதற்கு அரசாங்கம் செலவழிக்குமா?" என்ற திரு. செல்லதுரையின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் அவ்வாறு யோசனை கூறியுள்ளார்.

செயற்கை முறையில் மழை பெய்யச் செய்யும் திட்டத்தை நீலகிரி மாவட்டத்திலும், மற்றும் சில பிரதேசங்களிலும் நடத்தப்பட்டதாகவும், இந்தச் சோதனைகள் நம்பிக்கை தருவதாக இருப்பதாகவும், ரூ. 6,500-க்கு மேல் செலவழிக்காத முறையில் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்த உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

திரு. இரத்தின கவுண்டர்:— 'கிராமங்களில் பாட்டுகள் பாடி மழையைப் பெய்விக்கிறார்களே, அம்மாதிரி பாடி வருவிக்கிறவர்களுக்கு சர்க்கார் ஏதாவது பணம் ஒதுக்குமா?'

அமைச்சர்:— 'இதற்குப் பணம் தரவேண்டிய அவசியமில்லை; உறுப்பினர் போன்றவர்கள் பாடுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.'

ஆந்திரா - சென்னை எல்லைத் தகராறு

தீர்த்துவைக்க பதாஸ்கர் வந்துள்ளார்

சென்னை, டிச. 26—

'நியாயம் வழங்கத் தவறமாட்டேன்' என்ற உறுதி மொழியை, ஆந்திரா - சென்னை எல்லைத் தகராறுக்குத் தீர்வு காண அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் மத்திய மந்திரி படாஸ்கர், சென்னை வந்து சேர்ந்ததும் வழங்கியிருக்கிறார்.

நேற்று இரவு அவர் டில்லியிலிருந்து சென்னை மத்திய இரயில் நிலையம் வந்தபோது, அவரை தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 200 தொண்டர்கள் கோஷங்கள் எழுப்பி வரவேற்றிருக்கின்றனர்.

இரண்டு நாள் சென்னையில் தங்கும் அவர், சர்க்கார் சார்பில் மந்திரிகளுடையவும், இதர சில இயக்கங்களையும், தகராறினை ஒட்டிய கருத்துக்களைத் தருமாறு கேட்டுப் பெற்றுக்கொண்டு டில்லி செல்லுவிருக்கிறார் என்றும், பிரிதோர் சந்தர்ப்பத்தில் தகராறு பற்றிய ஆந்திர சர்க்காரின் கருத்தை அறிவார் என்றும் கூறப்படுகின்றது.

ஆந்திராவில் விவசாயப் பயிற்சிப் பள்ளி

நவீனகால முறைகளைக் கற்றுத் தர ஏற்பாடாம்!

அனந்தபூர், டிச. 24—

பம்பாயில் மஞ்சரி எனும் இடத்தில் உள்ளதைப்போன்று, ஆந்திர பிரதேச மாநிலத்திலும் ஒரு விவசாயப் பயிற்சிப்பள்ளி அமைக்கப்படுமாம்.

இந்தப் பள்ளியில் விவசாயிகளின் பிள்ளைகளுக்கு நவீனகால விவசாய முறைகள் பற்றி பயிற்சி தரப்படுமாம்.

இதன் மூலம் விவசாயம் ஒரு கவர்ச்சிகரமான இலாபகரமான தொழில் என்பதை பலரும் உணரத் தலைப்படுவார்களாம்.

இந்தத் தகவலை ஆந்திர விவசாய மந்திரி பி. திம்மா ரெட்டி கூறியிருக்கிறார்.

வனஸ்பதி தொழிற்சாலை

மூடு விழா!

காட்டுப்பாடி பஞ்சாயத்தின் கண்டனம்

கடந்த 17-ந் தேதியன்று வ. ஆ. மாவட்டம் காட்டுப்பாடியில் உள்ள சுதர்சன் வனஸ்பதி ஆயில் மில்ஸ் 26 பாகங்களாகக் கூறுபோட்டு ஏலம் விடப்பட்டது குறித்து வருத்தம் தெரிவித்து, காட்டுப்பாடி தாராபடவேடு பஞ்சாயத்துக் கூட்டம் ஒன்றில் அவசரத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும், ஏழை மக்களுக்கு வாழ்க்கை வசதி கிடைக்கக்கூடிய வகையில், அந்தத் தொழிற்சாலையை காட்பாடியிலேயே நடத்தக்கூடிய வழிவகைகள் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் காண ஒரு தனிக் குழு செல்லவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (த-தி.)

எண்ணெய் சுத்திகரிப்பு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் கூறியிருக்கின்றனராம். ஆனால் முன்வந்த டில்லிச் செய்திகள், விசாரணைக் குழு கல்கத்தாவிற்குத்தான் முதலிடம் தந்திருக்கிறது என்றும், இரண்டாவதாக பீகாரில் உள்ள பரௌனி எனும் இடத்தையும், மூன்றாவதாகத்தான் அசாமில் நிக்பாய் எனும் இடத்தையும் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் கூறியுள்ளன.

கழகக் கூட்டம்

மோகனூர்

அழகிரி தீட்டலில்

28—12—56 மாலை 6-மணிக்கு

தலைவர்: வி. காளியப்பன்

பேசுவோர்:

கி. மனோகரன்

வி. சிவப்பிரகாசம்;

எம். பி. வடிவேலு

கே. எஸ். மணி

சென்னை 16-வது வட்டம்

திருவள்ளுவர் முன்னேற்றக்கழகம்

27—12—56 மாலை 6-மணிக்கு, எண் 22, தாண்டவராய பிள்ளை தெருவில், தோழர் திரு ஜி. நாராயணசாமி தலைமையில் 'நமது எதிர்காலம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர். குதல் போட்டியும் நடைபெறும்.

இராயபுரம் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, தூரியாராயணசெட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடம் பெற்றது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

பார்க்கர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

விளையாட்டுப் பகுதித் தலைவர்: போலீஸ் கமிஷனர் எப் வி அருள்

ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், நந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஒலியக்கலை—இன்னும் பல

★

27—12—56 வியாழன் மாலை 6 மணிக்கு

சகுந்தலா கலையரங்கில் —சிற்பகலா நாடகமன்றம் அளிக்கும்

'ராணி சித்திரசேனை' தமிழ் நாடகம்

எம். எஸ். மோகன்—கண்டிராக்டர்

விலைவாசி ஏற்றத்திற்கு!

மத்திய மந்திரி கூறும் விநோதமான காரணம்

விலைவாசி ஏற்றத்திற்கு நாடாளும் நாயகர்களான மந்திரிகள் அளுங்கொரு விதமான காரணம் கூறிவருவதைக் காண்கிறோம்.

இப்போது மத்திய மந்திரி ஒருவர் ஒரு காரணம் கூறியிருக்கிறார்.

மக்களின் வாக்கும் சக்தி அதிகரித்துவிட்டதாம்! அதனால்தான் விலைகள் ஏறி விடுகின்றனவாம்!

குஹா என்ற அந்த மந்திரி, இவ்வுள்ள 'ரோட்டரி' சங்கத்தில் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.